# ADM COURT, SANKARANKOVIL

**தேதி 23.09.2025**

**அசல் வழக்கு எண். 188/2018**

**வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் 4,5,6,8 மற்றும் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அசல் வழக்கு தாக்கல் செய்தபிறகுதான் எங்களது இடம் நீதிமன்ற ஆணையர் மூலம் அளந்து பார்க்கப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அறிக்கை மற்றும் வரைபடங்கள் நீதிமன்ற ஆணையரால் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கை மற்றும் வரைபடங்கள் என்றால் சரிதான். **நீதிமன்ற ஆணையரின் அறிக்கை நீ.ம.சா.ஆ1 ஆகவும், நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள வரைபடம் நீ.ம.சா.ஆ.2 ஆகவும், சர்வேயர் தாக்கல் செய்துள்ள வரைபடம் நீ.ம.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றன**.

2. 4 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் அவர்களது இடத்தை அன்னத்தாய் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றனர் என்றால் சரிதான். பிராது 1ம் தபசில் 2ம் அயிட்ட சொத்து பொதுப்பாதை என்றால் சரிதான். 4 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் மேற்படி 1ம் தபசில் 2ம் அயிட்ட பொதுப்பாதையை பயன்படுத்தி வருகின்றனர் என்றால் சரிதான். 4 முதல் 9 வரையிலான பிரதிவாதிகளுக்கு 1 ம் தபசில் 2 ம் அயிட்ட பொதுப்பாதையில் உரிமை உண்டு என்றால் சரிதான். அன்னத்தாய் என்பவர் 4 முதல் 9 வரையிலான பிரதிவாதிகளுக்கு பிறப்பித்துக்கொடுத்த கிரைய ஆவணத்தில் பிராது 1ம் தபசில் 2ம் அயிட்ட சொத்து பொதுப்பாதையாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. 4 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் அவர்களது இடத்திலிருந்து பிரதான சாலைக்கு செல்வதற்கு பிராது 1ம் தபசில் 2ம் அயிட்ட பொதுப்பாதையை தவிர்த்து வேறு பாதை இல்லை என்றால் சரிதான். பிராது 1ம் தபசில் 2ம் அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள பொதுப்பாதையின் நீளம் மற்றும் அகலம் எவ்வளவு இருக்கும் என்றால் பொதுப்பாதையின் நீளம் 32 அடி, தென்வடல் அகலம் 15 அடி. மேற்படி பொதுப்பாதை வாதிகளால் பயன்படுத்தி வரப்படுகிறது என்றால் சரிதான். வாதிகளும், 4 முதல் 9 வரையிலான பிரதிவாதிகளும் பிரதான சாலையை அடைவதற்கு பிராது 1ம் தபசில் 2ம் அயிட்ட பொதுப்பாதையை பயன்படுத்துகிறோம் என்றால் சரிதான்.

4. மேற்படி பொதுப்பாதையின் மொத்த நீளம் எவ்வளவு என்றால் கிழமேல் 350 அடி, தென்வடல் 15 அடி. நான் கிரையம் பெற்ற சமயத்தில் பிராது 1ம் தபசில் 2ம் அயிட்ட பொதுப்பாதை ஸ்தலத்தில் இருந்ததா என்றால் இருந்தது. நான் கிரையம் பெற்ற சமயத்திலிருந்து தற்போதுவரை அந்த பொதுப்பாதை ஸ்தலத்தில் உள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற சமயத்தில் பொதுப்பாதையை அன்னத்தாய் அளந்து காண்பித்தாரா என்றால் அளந்து காண்பித்தார். மேற்படி பொதுப்பாதை இருந்ததால்தான் நான் எனது இடத்தை கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற சமயத்தில் மேற்படி பொதுப்பாதை வருவாய் துறை ஆவணங்களில் உள்ளதா என்பது பற்றி அறிய ஆவணங்களை பார்த்தேனா என்றால் குருக்கள்பட்டி கிராம நிர்வாக அலுவலகத்தில் மேற்படி வருவாய்த்துறை ஆவணங்களை கேட்டேன். அவர்கள் சொந்த இடத்தில் பாதை அமைத்து கொடுக்கும்போது கிரையம் பெற்றுக்கொள்ளலாம் என்று என்னிடம் கூறினர். நான் கிரையம் பெற்ற சமயத்தில் லேஅவுட் போன்ற நடைமுறைகள் பின்பற்றப்பட்டனவா என்றால் இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**